# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093615

1. District : மாவட்டம் தூத்துக்குடி    PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி    Year: ஆண்டு 2020    FIR No.: மு.த.அ. எண் 05/2020    Date: நாள் 13.12.2020

2. (i) Act சட்டம்: PC Act, 1988 as Amended in 2018    Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Cr.P.C    Sections பிரிவுகள்: 102
   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 13.12.2020 ம் தேதி மாலை 17.00 மணிக்கு முன்பாக    Date from : நாள் முதல்    Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல்    Time to : நேரம் வரை
   (b) information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.12.2020    Time : நேரம் 23.00 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 13.12.2020    Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி    ஆத்தூர், ஆறுமுகநேரி, திருச்செந்தூர், காயாமொழி மற்றும் குரும்பூர் ஸ்ரீநகர் சுமார் 45 கி.மீ தென்மேற்கு
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.C.குமார்    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் E.செல்லையா
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 50/2020    (d) Nationality : நாட்டினம் இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் முதுநிலை ஆய்வுக்குழு ஆய்வாளர்    (g) Address : முகவரி திருநெல்வேலி,

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1.)திரு.G.சுகுமார், 50/2020, த/பெ கணேசன், உதவி ஆணையாளர், (கலால்), தூத்துக்குடி மாவட்டம். (2.)திரு.கு.அந்தோணிராஜ், 57/2020, த/பெ குருசாமி, அலுவலக உதவியாளர், உதவி ஆணையாளர் (கலால்) அலுவலகம், தூத்துக்குடி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

----

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ----

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்பப்படுகிறது :-

தூத்துக்குடி மாவட்டம் உதவி ஆணையர் (கலால்) மற்றும் கூடுதல் பொறுப்பு தனித் துணை ஆட்சியர் (முத்திரை) திரு.க.சுகுமார் மற்றும் அவரது அலுவலக உதவியாளர் திரு.அந்தோணிராஜ் ஆகியோர் ஆத்தூர், ஆறுமுகநேரி, திருச்செந்தூர், காயாமொழி மற்றும் குரும்பூர் ஆகிய பகுதிகளில் உள்ள டாஸ்மாக் கடைகளில் மாத மாமூல் வசூல் செய்வதாகவும், கடைசியாக குரும்பூர் கடையில் மாமூல் வசூல் செய்வார்கள் என்றும் கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் 13.12.2020-ம் தேதி மாலை 16.45 மணி முதல் 21.30 மணி வரை திரு.C.குமார், முதுநிலை ஆய்வுக்குழு ஆய்வாளர், திருநெல்வேலி அவர்களுடன் குரும்பூர் ஸ்ரீநகர் டாஸ்மாக் கடை எண்.10093-ல் நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் முதுநிலை ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.C.குமார் அவர்கள்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed R Authees.......... Rank r.of.Police....... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

13.12.2020 13/12/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
14.12.2020 at 05.45 hrs

Name: பெயர் திரு.G.ஜெய்கர் தர்ம ராஜ்.
Rank: நிலை ....................No. எண் ........

Deputy Superintendent of Police
Vigilance And Anti Corruption
Thoothukkudi District
Thoothukkudi

* GCP-240-34(Type 2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 05/2020, பிரிவு 7 of PC Act, 1988 as Amended in 2018 and 102 Cr.P.C –ன் தொடர்ச்சி.

கொடுத்த புகார் மனுவை 13.12.2020-ம் தேதி நான் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலக பணியில் இருந்தபோது இரவு 23.00 மணிக்கு பெற்று தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 05/2020, பிரிவு **7 of PC Act 1988 as Amended in 2018 and 102 Cr.P.C**–ன் படி மேற்கண்ட இரண்டு எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் **C.**குமார், முதுநிலை ஆய்வுக்குழு ஆய்வாளர், திருநெல்வேலி. பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி. அய்யா, பொருள் : திடீர் தணிக்கை செயல்முறைகள் - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது தொடர்பாக. தூத்துக்குடி மாவட்டம் உதவி ஆணையர் (கலால்) மற்றும் கூடுதல் பொறுப்பு தனித் துணை ஆட்சியர் (முத்திரை) திரு.க.சுகுமார் மற்றும் அவரது அலுவலக உதவியாளர் திரு.அந்தோணிராஜ் ஆகியோர் ஆத்தூர், ஆறுமுகநேரி, திருச்செந்தூர், காயாமொழி மற்றும் குரும்பூர் ஆகிய பகுதிகளில் உள்ள டாஸ்மாக் கடைகளில் மாத மாமூல் வசூல் செய்வதாகவும், கடைசியாக குரும்பூர் கடையில் மாமூல் வசூல் செய்வார்கள் என்றும் கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் 13.12.2020-ம் தேதி மாலை 16.45 மணிக்கு ஏரல் தாலுகா குரும்பூர், ஸ்ரீநகரில் உள்ள டாஸ்மாக் கடை எண்.10093 அருகே இருந்து கண்காணித்துக் கொண்டிருந்தபோது **TN 69 BH 1495 Maruthi Tour S** என்ற வெள்ளை நிற காரில் வந்து பின்னர் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த திரு.க.சுகுமார், உதவி ஆணையர் (கலால்) டாஸ்மாக் கடைக்கு சென்று கடையின் உள்ளே இருந்து தணிக்கை செய்தார். அவருடன் வந்த அவரது அலுவலக உதவியாளர் திரு.அந்தோணிராஜ் கடையின் வாசல் அருகே நின்று கொண்டிருந்தார். அப்போது பின்னர் பெயர் விபரம் கேட்டுத் தெரிந்த குரும்பூர் ஸ்ரீநகர் டாஸ்மாக் கடை எண் 10093-ன் சூப்பர்வைசர் திரு.பலவேசமுத்து உதவி ஆணையரிடமும், அவரது அலுவலக உதவியாளரிடமும் தனித்தனியாக கொடுத்த பணத்தை அவர்கள் இருவரும் தனித்தனியாக பெற்றுக் கொண்டு கடைக்கு வெளியே வரும்போது மாலை 17.00 மணிக்கு நானும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.ஜா.ஹெக்டர் தர்மராஜ், ஆய்வாளர்

திருமதி.சி.ஜெயஸ்ரீ மற்றும் போலீஸ் பார்ட்டியினர் சகிதம் எங்களை அவர்களுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டு அவர்களை சோதனை செய்ததில் உதவி ஆணையர் திரு.க.சுகுமார் அவருடைய முன்புற இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் தனித்தனியாக கத்தையாக இருந்த ரூ.12,160/-மும், அலுவலக உதவியாளர் திரு.அந்தோணிராஜ் அணிந்திருந்த பேண்ட் பாக்கெட்டில் தனித்தனி கத்தையாக இருந்த பணம் ரூ.14,000/-மும், மேற்படி இருவரும் வந்த வாகனத்தில் டிரைவர் சீட்டுக்கு பின் இருக்கையில் இருந்த உதவி ஆணையரின் கருப்பு நிற ரெக்ஸின் பேக்கின் அருகில் இருந்த இரண்டு அடுக்கு டிபன் பாக்ஸின் மேல்அடுக்கில் கத்தையாக இருந்த பணம் ரூ.6,000/-மும், அதற்கு அடியில் உதவி ஆணையர் (ஆயம்) 2020 நவம்பர் மாத நாட்குறிப்பு என்று தலைப்பிட்டு விபரம் காணப்பட்ட ஒரு பேப்பரின் உள் பண்டலாக சுற்றி கத்தையாக வைக்கப்பட்டிருந்த பணம் ரூ.43,000/-ம் வைத்திருந்தனர். மேற்படி பணம் குறித்து அவர்களிடம் விளக்கம் கேட்டதில், அதற்கு அவர்கள் அளித்த விளக்கம் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் இல்லாததாலும், சந்தேகப்படும்படியாக இருந்ததாலும், மேற்படி கடையின் மேற்பார்வையாளர் திரு.ப.பலவேசமுத்து தனது வாக்குமூலத்தில் ரூ.3,000/-ம் உதவி ஆணையர் திரு.க.சுகுமாருக்கும், ரூ.2000/-ம் அவரது அலுவலக உதவியாளர் திரு.கு.அந்தோணிராஜ்-க்கும் கொடுத்ததை ஒப்புக்கொண்டதாலும், டாஸ்மாக் கடைகளில் மாமூல் வசூலித்ததற்கான முகாந்திரம் இருந்ததாலும், மேற்படி பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி கடையில் வைத்து செயல்முறைகள் தயார் செய்ய போதிய வசதி இல்லாததாலும், மதுப்பிரியர்கள் வந்த வண்ணம் இருந்ததாலும் மேற்படி கடையில் இருந்து சுமார் முக்கால் கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அங்கமங்கலம் கிராம நிர்வாக அலுவலருக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்து அவரது அலுவலகத்திற்கு தணிக்கைக் குழுவினர் மற்றும் உதவி ஆணையர் திரு.க.சுகுமார், அலுவலக உதவியாளர் திரு.கு.அந்தோணிராஜ், கார் ஓட்டுநர் திரு.பெ.ராஜாசிங் மற்றும் மேற்படி டாஸ்மாக் கடை மேற்பார்வையாளர் திரு.ப.பலவேசமுத்து ஆகியோர் சகிதம் சென்று 13.12.2020-ம் தேதி மாலை 17.00 மணி முதல் இரவு 21.30 மணி வரை நடந்த விபரத்திற்கு செயல்முறைகள் தயார் செய்யப்பட்டது. மேற்படி முகாந்திரம் இல்லாமல் பணம் வைத்திருந்த உதவி ஆணையாளர் (கலால்) திரு.க.சுகுமார், அவரது அலுவலக உதவியாளர் திரு.கு.அந்தோணிராஜ் ஆகியோர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொண்டு இத்துடன் செயல்முறை

நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.75,160/-, பின் இணைப்புகள் 1 முதல் 4 வரையும், திரு.க.சுகுமார், திரு.கு.அந்தோணிராஜ், திரு.பெ.ராஜாசிங் மற்றும் திரு.ப.பலவேசமுத்து ஆகியோர்களது வாக்குமூலங்கள் மற்றும் செயல்முறைகளின் படி கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் பொருட்களையும் இத்துடன் இணைத்து தங்களிடம் ஒப்படைக்கிறேன். Sd/- இ.குமார், 13.12.2020, **Senior Inspection cell Inspector, Tirunelveli. Sir, Received the complaint on today 13.12.2020 at 23.00 hrs and I am registering the complaint as a case in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.5/2020, U/s 102 Cr.P.C and 7 of PC Act, 1988 as Amended in 2018. Sd/- 13.12.2020, G.Hector Dharma Raj, DSP, V&AC, Thoothukudi.** இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, திரு.S.குமார் அவர்களின் அசல் புகார் மனு மற்றும் தூத்துக்குடி ஏரல் தாலுகா அங்கமங்கலம் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்த செயல்முறைகள் மற்றும் பின் இணைப்பு – 1 முதல் 4, (1.)திரு.G.சுகுமார், உதவி ஆணையாளர் (கலால்), (துணை ஆட்சியர்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி (2.)திரு.G.அந்தோணிராஜ், அலுவலக உதவியாளர், உதவி ஆணையாளர் (கலால்) அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி (3.)திரு.ராஜாசிங், ஓட்டுநர், (4.)திரு.ப.பலவேசமுத்து, மேற்பார்வையாளர், குரும்பூர் ஸ்ரீநகர் டாஸ்மாக் கடை எண்.10093 ஆகியோர்களது வாக்குமூலம் ஆகியவற்றை இணைத்து மேண்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நடுவர், தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொண்டேன்.

13/12/2020

Deputy Superintendent of Police
Vigilance And Anti Corruption
Thoothukkudi District
Thoothukkudi